---

**மினுவன்கொடை நகர சபை**

---

**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 13 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 02 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2013 ஒக்டோபர் 24 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

---

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட சிறந்த தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் மினுவன்கொடை நகர சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியுள்ளது என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்படும் எனது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மினுவன்கொடை நகர சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அச்செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகளையும் காசுப்பாய்ச்சல் கூற்றையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற முத்திரை வருமானம் ரூபா 4,025,035 தொகையான போதிலும் இது ரூபா 7,415,720 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கப் வண்டி ஒன்று கொள்வனவு செய்யப்படுவதற்காக மாகாண வருமான ஆணையாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப் பட்டிருந்த ரூபா 6,100,000 தொகையான கடன் தொகை வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது 06 விடயங்களுக்கு உரித்தான செலுத்த வேண்டிய ரூபா 15,494,383 தொகையான செலவினம் திரண்ட செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது பெறவேண்டிய (தீர்க்கப்படக்கூடிய) பெறுமதி சேர் வரி ரூபா 429,439 தொகையான மீதி நகர சபை முதலீடாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது டபிள் கப் வண்டி பழுதுபார்க்கப்படுவதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 740,325 தொகை செலவினமாகக் கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) நீண்டகாலமாக 10 தொழில்களுக்காக கடன்கொடுத்தோராக ரூபா 5,961,474 தொகை முன்கொண்டு செல்லப்பட்டிருந்த போதிலும் தொழில் பூர்த்தியடைந்திருந்த போதிலும் அவை கடன்கொடுத்தோராகக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன. மேலும் கடந்த ஆண்டின் வேலை பூர்த்தியடைந்திருந்த நான்கு தொழில்களுக்கான ரூபா 179,335 தொகை கடன்கொடுத்தோராகக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(எ) மினுவங்கொட மணமின மாவத்தை மீளமைப்பு மற்றும் பேதிரிஸ் மாவத்தை கொங்கிரீட் இடப்படுவதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,731,864 தொகை கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 40,303,896 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 12 கணக்கு விடயங்களுக்கு உரித்தான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 66,110,157 ஆனதுடன் அவற்றிற்கு உரித்தான துணைப் பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 44,737,719 ஆகக் காணப்பட்டது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 12,712,358 ஆக இருந்ததுடன் இதனை நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 6,018,257 ஆக இருந்தது.

### 2.2 நிதி நிர்வாகம்

துணைக்கட்டுநிதி உரிய பணி முடிவுற்றதை உடனடுத்து தீர்க்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராத ரூபா 8,426,564 தொகை ஆண்டின் இறுதியில் முற்கொடுப்பனவு மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்குரித்தாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடியா னது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 7,783 | 8,551 | 7,442 |
| (ii) | குத்தகை | 9,495 | 11,196 | 1,410 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 477 | 855 | 01 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 6,177 | 13,202 | 4,661 |

நகர சபைக் கட்டளைச் சட்டம் (255 ஆம் அத்தியாயம்) 170 அ(2) ஆம் பிரிவின் பிரகாரம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய கட்டணம் அல்லது வேறு கொடுப்பனவுகள் அறவிடப்பட்டு இவை நகர சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதற்காக தேவையான சகல நடவடிக்கையும் எடுக்கப்படுவது சபைச் செயலாளரின் செயற்பாடான போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வீதவரியான ரூபா 7,441,584 தொகை அறவிடப்பட வேண்டிய ஏனைய வருமானங்களான ரூபா 6,071,927 தொகை, அறவிடப்பட வேண்டிய வீதவரித் தொகையான ரூபா 5,512,557 தொகை மற்றும் அறவிடப்பட வேண்டிய வீட்டு வாடகைத் தொகையான ரூபா 396,945 தொகை அறவிடப்படுவதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல்வாங்கல்கள்

1995 மார்ச் 09 ஆம் திகதிய எல்ஜீடீ/95/4 ஆம் இலக்க மேல்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான வைப்புகள் மீளப்பெறப்படுவதற்காக உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ரூபா 6,000,000 தொகையான நிலையான வைப்புத் தொகை 2012 யூலை 27 ஆம் திகதி உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரம் இன்றி மீளப்பெறப்பட்டிருந்தது.

## 2.5 திண்மக் கழிவு முகாமைத்துவம்

2008 யூலை 30 ஆம் திகதிய 1560/6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள 2008 இன் 01 ஆம் இலக்க ‘‘திண்மக் கழிவு முகாமைத்துவ விதி’’ சகல உள்ளூராட்சி நிறுவகங்களும் செயற்படுத்த வேண்டும் என 2010 திசெம்பர் 21 ஆம் திகதிய எல்ஜீடீ/05/08/பொது/ வெலும மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் (மேல் மாகாண) கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் சபை அவற்றை அமுல்படுத்தியிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது இது தொடர்பாக வருமானம் மதிப்பிடப்பட்டிராததுடன் செலவினமாக ரூபா 10,797,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்தது.

## 2.6 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர சபையிடம் உள்ள 20 கி.மீ. களுக்குக் குறைவான அளவிலான வீதி அபிவிருத்திக்காக ரூபா 1,500,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் இது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஒக்டோபர் 15 ஆம் திகதி முதல் 2012 ஒக்டோபர் 25 ஆம் திகதி வரையான 07 நாட்களுக்கு நாடெங்கிலும் செயற்படுத்தப்படுவதற்காக திட்டமிடப்பட்டிருந்த உள்ளூராட்சி வாரத்திற்காக எவ்வித நிகழ்ச்சித்திட்டமும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2003 யூன் 02 ஆம் திகதிய மற்றும் பீஈடீ/12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் படி சபையின் நோக்கம் மற்றும் செயற்பணியை மேற்கொள்வதற்காக 05 ஆண்டுகளுக்குக் குறைவற்ற காலத்திற்கான கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்